TNKR080005212019

**சார்பு நீதிமன்றம், குளித்தலை.**

**முன்னிலை : – திரு.ஈ.முத்துசாமி, பி.ஏ., பி.எல்.,**

**மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாய நீதிபதி, குளித்தலை.**

**2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9–ஆம் தேதி திங்கட்கிழமை**

**MCOP No.260/2019**

(CNR No.TNKR08-000521-2019)

வேல்மயில் (எ) வேலுமயில் . . . மனுதாரர்

/எதிர்/

1. கோபிநாத்
2. தி ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,
   திருச்சி . . . எதிர்மனுதாரர்கள்

இம்மனு கடந்த 26.02.2026–ஆம் தேதி இறுதியாக என் முன்பு விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.B.மீனாட்சி சுந்தரம், அவர்கள் முன்னிலையாகியும், முதல் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பாலகுமார், அவர்கள் முன்னிலையாகியும், இரண்டாவது எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.ரத்தினம், அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரை கேட்டறிந்த பின்பும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இந்நீதிமன்றம் பிறப்பிக்கும் ...

**உத்தரவு**

மனுதாரரால் மோட்டார் வாகன சட்டப்பிரிவு 140 மற்றும் 166–ன் கீழ் இழப்பீடாக ரூ.10,00,000/– கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1)** மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில், மனுதாரர் சமத்துவபுரம், இரணியமங்கலம், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம் என்கின்ற முகவரியில் குடியிருந்து வருவதாகவும், முதல் எதிர்மனுதாரர் 6/161, கும்மணம்பட்டி, வீரக்காள், திண்டுக்கல் என்கின்ற முகவரியில் குடியிருந்து வருவதாகவும், இரண்டாவது

எதிர்மனுதாரர் க.எண்.4, பாரதிதாசன் ரோடு, 2–வது தளம், கண்டோன்மெண்ட், திருச்சி என்கின்ற முகவரியில் அலுவலகம் வைத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

2) கடந்த 06.09.2017–ம் தேதி அன்று மனுதாரர் திண்டுக்கல் டூ வத்தலகுண்டு ரோட்டில் கருப்பணசாமி கோவில் அடுத்து கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ரோட்டின் இடதுபுறம் ஓரமாக நடந்து சென்று கொண்டிருந்த போது, அதே ரோட்டில் மனுதாரருக்கு பின்னால் வந்த முதல் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 57 AM 8919 என்ற இருசக்கர வாகனத்தை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி சென்று, மனுதாரர் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதியதால் விபத்து ஏற்பட, மேற்படி விபத்திற்காக திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் குற்ற எண்.438/2017 இ.த.ச பிரிவுகள் 279, 337–ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

3) மோட்டார் வாகன சட்டப்பிரிவு 166(2)–ல் *“Every Application under sub-section (1) shall be made, at the option of claimant, either to the Claims Tribunal having jurisdiction over the area in which the accident occurred or to the Claims Tribunal within the local limits of whose jurisdiction the claimant resides or carries on business or with the local limits of whose jurisdiction the defendants resides, they shall be in such form and contain such particulars as may be prescribed”* என குறிப்பிடப்பட்டுள்ளது.

4) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் மனுதாரர் இந்நீதிமன்ற ஆள்வரையறைக்குள் குடியிருப்பதாக கூறியிருப்பினும், அவ்வாறு மனுதாரர்கள் இந்நீதிமன்ற ஆள்வரையறைக்குள் குடியிருந்து வருகிறார் என்பதற்காக ஆவணங்களை தாக்கல் செய்யுமாறும், மேற்படி இம்மனுவினை விசாரணை செய்வதற்கு இந்நீதிமன்றத்திற்கு ஆள்வரையறை உள்ளதா? என்பது குறித்தும் மனுதாரரிடம் வினா எழுப்ப, மனுதாரர் தரப்பில், மனுதாரர் இந்நீதிமன்ற ஆள்வரையறைக்குள் குடியிருப்பதற்கான ஆவணங்கள் கிடைக்கப்பெறவில்லை என கடந்த 26.02.2026–ம் தேதி அன்று குறிப்பாணை தாக்கல் செய்துள்ளார். அவ்விதத்தில்,

***"The Hon’ble Madurai Bench of Madras High Court in Royal Sundaram Alliance Insurance Co.Ltd Vs Manoj Kumar and Ayyappan dated 28.11.2016 in Tr.CMP(MD) Nos.482 to 485 of 2016*** *held as follows:- “It is needless to state that minimum rule which followed by the Tribunals / Courts, while scrutinizing applications is that the residential proof has to be verified, by asking the claimants to produce the original documents, regarding their permanent residential addresses, through the recognized Government Identity Cards. In the absence of any such proof for residence, the MCOP applications need not be numbered. A person who is not having any such documents, in the case, where there is no government Identity Cards, at least, a sworn affidavit is required the residential address”* என கூறப்பட்டுள்ளது. மேற்படி முன்தீர்ப்பானது இம்மனுவின் தன்மைக்கும், பொருண்மைக்கும் பொருந்துவதாக உள்ளது.

5) மனுதாரரோ, முதல் எதிர்மனுதாரரோ இந்நீதிமன்ற ஆள்வரையறைக்குள் குடியிருக்கவில்லை என்பதால், இரண்டாவது எதிர்மனுதாரரின் நிறுவனம் இந்நீதிமன்ற ஆள்வரையறைக்குள் இல்லை என்பதாலும், மேற்படி மனுவினை விசாரணை செய்வதற்கு இந்நீதிமன்றத்திற்கு ஆள்வரையறை இல்லை என முடிவு செய்யப்படுகிறது.

**6) முடிவாக,**

**(அ)** மனுதாரரின் மனுவானது திருப்பப்படுகிறது. (Return)

**(ஆ)** மனுதாரர், உத்தரவு பிறப்பிக்கப்பட்ட இரண்டு மாதங்களுக்குள் உரிய நீதிமன்றத்தில் இந்த மனுவினை தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.03.09 15:21:04 +0530

தீர்ப்பாய நீதிபதி,
குளித்தலை.